1978 ஆகஸ்ட் 31]

அருள்மிகு தாயுமானவர் மலைக் கோவிலுக்கு மின் இழுவை

* வின 8.— திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத்துறை வளர்ச்சி கருதி அருள்மிகு தாயுமானவர் மலைக் கோவிலுக்கு மின் இழுவை (Lift) போடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அண்டு (ஆ) மின் இழுவை ரயில் போட இயலுமா, அதனுல் பலன் ஏற்படுமா, என்பது பரிசீலனையில் உள்ளது.

திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னுர்கள். அந்த மலைக்கோட்டை, திருச்சியின் மத்தியிலே இருப்பதால், வெளி மாநிலங்களிலிருந்து அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாலும், அங்கே மேலே ஏறுவதற்கு உடல் ஊனமுற்றவர்கள், அதே போல உடல் நலம் குன்றியவர்கள் ஆகியவர்களால் முடியாமல் இருப்பதால் அதற்கு உடனடியாக மின் இழுவை பொருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளாக உடல் ஊனமுற்றவர்கள் அல்லது உடல் நலம் குன்றியவர்கள் வர மாட்டார்கள் உடல் நலத்துடன், இருப்பவர்கள்தான் அநேகமாக வருவார்கள். இருந்தாலும் அதற்குப் பெரிய அளவிலே செலவாகும் என்று கருதப்படுவதால் அது பலன் அளிக்குமா அல்லது இலாபம் அளிக்குமா என்பது பரிசீலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்த இழுவை இரயில் போடுவது பற்றி யோசிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். இதைப் போடுவதா, வேண்டாமா என்பதை எதன் அடிப்படையில் நிர்ணயிக்கிருர்கள்? அப்படிப் பார்க்கிற பொழுது, வடாற்காடு மாவட்டத்தில் சோளிங்கரில் நரசிம்மஸ்வாமி கோயில் இருக்கிறது. அது உயரமான மலை. அதற்கும் இழுவை இரயில் போட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறதா? ஆகவே, அப்படி நிர்ணயிக்கிறபொழுது இந்த சோளிங்கர் மலையும் வருகிறதா? அதற்கும் திட்டம் போடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கேள்வி திருச்சி மலைக் கோவிலைப் பற்றியது. தமிழகத்திலே மலைகளின் மேல் கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதிலை அளிக்கலாம்.

திரு. துரை முருகன் : என்னுடைய கேள்வியில் முதல் பகுதியில் எதன் அடிப்டையில் இதைப்போடுவதா வேண்டாமா என்று யோசிக்கப்படுகிறது என்று கேட்டேன். அதைத் தொடர்ந்து நான் கேட்டது போனஸ் மாதிரி.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே அதோடு நிறுத்தியிருந்தால் பதில் தரவும் சாதகமாக இருந்திருக்கும். அடிப்படை என்பது, அதற்கான செலவு, அந்தச் செலவைச் செய்வதன் மூலம் என்ன இலாபம் அல்லது பலன் என்ற அடிப்படையிலேதான் யோசிக்கப்படுகிறது. முதலிலே போட்ட திட்டத்தில், சுமார், 5,88,500 ரூபாய் வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகு விஞ்ச் அல்லது லிப்ட் போட முடியாது என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு, "ரோப் வே" போடுவது என்றால் 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இவ்வளவு செலவிடப்பட்டால் இதனால் பலன் ஏற்படுமா என்பதுதான் பரிசீலனைக்கு அடிப்படை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இலாபத்தை மட்டும் மனதில் கொள்ளாமல் திட்டத்தின் அவசியம் கருதி அதை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, முதலில் சொன்ன பதிலிலேயே தெரிவித்திருக்கின்றேன். இலாபம் மாத்திரம் அல்ல, பலனும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, அரசு இலாப நஷ்டக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதால், தனியார் துறையில் யாராவது இதற்கு முன்வந்தால் அவர்கள் இதை நடத்துவதற்கு முன் வருவார்களேயானால் அரசு அதற்கான அனுமதியை வழங்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிந்த தனியார் யாராவது அப்படி முன் வருகிறார்களா என்று அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.